முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், விழுப்புரம்

S.C. No. 106/2015

PW 1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ராமலிங்கம் | சாதி | |
| த/பெ | திரு.ராமானுஜம் | மதம் | |
| கிராமம் | | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| தாலுக்கா | | வயது | |
| வட்டம் | | தேதி | |

(15.02.2021) 1963ம் ஆண்டு சட்டம் 44 பிரிவு 4ன்படி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு சாட்சியமளிக்கப்பட்டது. (சாட்சியை அவருடைய ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்.)

எ.த.கு. விசாரணை(தொடர்ச்சி)

உங்கள் பாக்கெட் டைரியில் பிடாகத்தை சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு எதிராக இருந்த பிடியாணையை நிறைவேற்றுவதற்காக இருந்த பணியை எழுதினீர்களா என்றால் எழுதினேன். நான் அன்றைய தினம் சிவில் ஆடையில் தான் இருந்தேன்.

ஆக அந்த சமயத்தில் எதிரிக்கு நீங்கள் காவல் துறையை சேர்ந்தவர் என்று தெரியாது என்றால் தெரியும்.

நான் அதற்கு முன்பு எதிரிகளை எந்த வழக்கு சம்மந்தமாகவும் விசாரிக்கவில்லை.

சம்பவத்தில் உங்களை தாக்கியதாக சொல்லும் 3வது நபர் பற்றி அடையாளம் தெரியுமா என்றால் தெரியாது.

அவர்கள் யாரென்று தெரிந்துகொள்ள முயற்சி செய்தீர்களா என்றால் இல்லை.

சம்பவத்தின்போது உங்கள் காவல் நிலையத்தில் தான் அ.சா.2 சக்திவேல் பணிபுரிந்தார் என்றால் சரிதான்.

சக்திவேல் அந்த சமயத்தில் எந்த பணி சம்மந்தமாக நிலைய பொறுப்பிலிருந்தார் என்றால் எனக்கு தெரியாது.

பின்னால் கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் நீதிமன்ற வேலை சம்மந்தமாக என்று தெரிந்துகொண்டேன்.

சம்பவ தினம் ஞாயிற்றுக்கிழமை என்பதால் சக்திவேல் நீதிமன்ற பணி சம்மந்தமாக வரவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக நீதிமன்ற பணிக்கு வந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்த பிறகு எங்கு சென்றீர்கள் என்றால் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

வீட்டிற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் பகல் 03.00 மணிக்கு சென்றேன்.

பிறகு மருத்துவமனைக்கு சென்றேன். அந்த தனியார் மருத்துவமனையின் பெயர் ஞாபகமில்லை.

அதன் பிறகு வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

நான் மட்டும்தான் மருத்துவமனைக்கு சென்றேன்.

அ.சா.2 உங்களுடன் வந்தாரா என்றால் ஞாபகமில்லை.

சம்பவம் நடந்ததாக சொல்லும் இடம் மேற்கு காவல் நிலையத்திற்கு மிக அருகாமையில் இருந்தது.

விழுப்புரம் அரசு மருத்துவமனை அதிலிருந்து சிறிது தூரத்திலிருந்தது.

மேற்கு காவல் நிலையத்திற்கும் மருத்துவமனைக்கும் சுமார் 200 மீட்டர் இருக்கும் என்றால் சரிதான்.

நீங்கள் ஒரு காவலர் என்பதால் சம்பவம் நடந்தவுடன் உடனடியாக புகார் கொடுக்கவேண்டும் என்று தெரிந்தும் அருகிலுள்ள மேற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்காமல் நீங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டீர்கள் என்று சொன்னால் என்னை அடித்து அசிங்கப்படுத்திவிட்டதால்சென்றுவிட்டேன்.

இந்த மாதிரி அசிங்கப்பட்டுவிட்டதால் புகார் கொடுக்க தாமதமாகிவிட்டது என்று புகாரிலோ போலிஸ் விசாரணையிலோ சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

நீங்கள் மிக அருகிலுள்ள அரசு மருத்துவமனைக்கு செல்லாமல் இருந்திருப்பது நீங்கள் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல.

நீங்கள் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் போலிஸ் விசாரணையின்போது சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை.

நீங்கள் பணிபுரியும் காவல் நிலையத்தில் யாரிடம் சம்பவம் சம்மந்தமாக சொல்லியுள்ளீர்கள் என்றால் குமார் என்ற ஆய்வாளரிடம் சொன்னேன்.

அந்த சமயத்தில் குமார் உதவி ஆய்வாளராக இருந்தார்.

காவல் நிலையத்திலிருந்த ஆய்வாளரிடம் சொன்னீர்களா என்றால் பொதுவாக உதவி ஆய்வாளர் வசம் தான் சொல்வோம்.

உதவி ஆய்வாளர் ஆய்வாளரிடம் சொல்வதாக சொன்னார்.

அதன் பிறகு இரவு 08.00 மணி அளவில் ஆய்வாளரை பார்த்தேன்.

புகார் கொடுத்தேன் அதை அவர் மேற்கு காவல் நிலையத்தில் கொடுக்கச் சொன்னார். அதன் பிறகு மேற்கு காவல் நிலைய ஆய்வாளரிடம் புகார் கொடுத்தேன்.

புகார் கொடுத்த பிறகு மருத்துவமனை சென்றேன்.

மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் என்னை அன்று இரவே விசாரித்தார். நேரம் சரியாக ஞாபகமில்லை. என்னை மருத்துவமனையில் வந்து விசாரித்தார்.

விபத்து பதிவேட்டில் ஒரு நபர் உள்நோயாளியா அல்லது வெளி நோயாளியா என்பது பற்றி பதியப்படும் என்றால் சரிதான்.

உங்களுக்கான விபத்து பதிவேட்டில் நீங்கள் புறநோயாளியாக சிகிச்சை எடுத்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

விபத்து பதிவேட்டில் நீங்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டிருந்தால் அதுபற்றிய பதிவு இருக்கும் என்றால் சரிதான்.

உங்கள் விபத்து பதிவேட்டில் அந்த மாதிரி பதிவு இல்லை என்று சொன்னால் அதில் உள்ளது எனக்கு தெரியாது.

ஆய்வாளர் என்னை மருத்துவமனை படுக்கையில் படுத்திருந்தபோதுதான்

விசாரித்தார்.

எந்த வார்டில் வைத்து விசாரித்தார் என ஞாபகமில்லை.

உங்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் இந்த நீதிமன்றத்தில் உங்களை புறநோயாளியாக சிகிச்சை அளித்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும் ஆகையால், நீங்கள் உள்நோயாளி என்று பொய்யாக சாட்சியம் சொல்கிறீர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

உங்களுக்கு எதிராக 1வது எதிரி புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

அதன் படி உங்கள் மீதும் எஸ்.ஐ குமார் மீதும் மற்றும் காவலர்கள் சிலர் பேரும் மீதும் எஸ்.சி எஸ்.டி சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

நீங்களும் மற்ற காவலர்களும் 1வது எதிரியை தாக்கியதாக மாநில மனித உரிமை ஆணையத்தின் மீது வழக்கு தொடுக்கப்பட்டது என்றால் ஆமாம்.

நீங்கள், எஸ்.ஐ குமார் மற்றும் ஆய்வாளர் மணி ஆகியோருக்கு 2019ம் ஆண்டு செப்டம்பர் 16ம் தேதி மனித உரிமை ஆணையம் தீர்ப்பு சொன்னது என்றால் சரிதான்.

அதில் நீங்கள் ரூ.1லட்சம் 1வது எதிரிக்கு நஷ்ட ஈடாக வழங்க வேண்டுமென்று தீர்ப்பு உள்ளது என்றால் சரிதான். அதற்கு எதிராக நான் அப்பீல் செய்து நிலுவையில் உள்ளது.

உங்கள் மீதும் துறை ரீதியான நடவடிக்கை மற்றும் குற்ற வழக்கு தாக்கல் செய்யவேண்டுமென்று தீர்ப்பாகியுள்ளது என்றால் ஆமாம்.

கடலூரில் மனித உரிமை ஆணையம் விசாரித்த தேதி ஞாபகமில்லை.

2015ம் ஆண்டு என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை.

மனித உரிமை ஆணையம் விசாரணையை ஆரம்பித்த பிறகுதான் இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதை ஆய்வாளரிடம் தான் கேட்கவேண்டும்.

மனித உரிமை ஆணையத்தில் நாங்கள் எதிர் வாதம் செய்துள்ளோம்.

1வது எதிரி கொடுத்த உங்களுக்கு எதிரான புகாரின் வழக்கை சங்கதி பிழை என்று முடித்துவைக்கப்பட்டது என்றால் டிஎஸ்பி தான் விசாரித்தார்.

அந்த சங்கதியை நீங்கள் மனித உரிமை ஆணையத்தில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் உரையில் சொல்லியுள்ளீர்கள் என்றால் ஆமாம்.

அதன் பிறகு தான் இந்த வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டது என்றால் ஆய்வாளரை கேட்கவேண்டும்.

1வது எதிரி உங்கள் மீது கொடுத்த வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்கில் நீங்கள் கைது செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

மற்ற காவலர்களும் அதே போல் கைது செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

வன்கொடுமை தடுப்பு சட்ட வழக்கில் என்னை டி.எஸ்.பி. விசாரித்தார்.

எப்பொழுது விசாரித்தார் தேதி ஞாபகமில்லை. வருடம் ஞாபகமில்லை.

<u>குறுக்கு விசாரணை எதிர் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது</u>.

Taken down before / me in Open
Court and read over / interpreted
to the witness and acknowledge
by him/her to be correct.

Principal Asst. Sessions Judge,(FAC)
Villupuram. 15.02.2021